**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 50** **நாள்: 28.02.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் பெண் குழந்தைகளை காப்போம், பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம் குறித்த சிறப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவ சேவைகள் துறை சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் தாய், சேய் நல சம்பந்தமாக பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் ஆணையாளர் திரு.ஜி.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

2011ம் ஆண்டின் புள்ளிவிவரப்படி, நம் இந்திய நாட்டில் 1000 ஆண் குழந்தைகளுக்கு, 918 பெண் குழந்தைகளே உள்ளனர். ஆனால் 1961ல், 1000 ஆண் குழந்தைகளுக்கு 976 பெண் குழந்தைகள் என இருந்த நிலைமாறி, கடந்த 50 ஆண்டுகளில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் குறைந்து 918 ஆக உள்ளது. இதனை கருத்திற்கொண்டு, மத்திய அரசால் 2014–15ஆம் ஆண்டில் ‘‘பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்’’ என்ற திட்டம் துவங்கப்பட்டது. பாலின பாகுபாடு அடிப்படையில் குழந்தைகளின் பாலினம் அறிந்து கொல்லப்படுவதை தடுத்தல், பெண் குழந்தைகள் உயிர் வாழ்வதையும், அவர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியினை மேம்படுத்துதல் போன்றவை இதன் முக்கிய நோக்கங்கள் ஆகும். சமூகநலத்துறையின் வழிகாட்டுதலின் படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் மருத்துவ சேவைகள் துறையின் மூலம் சென்னை மாநகரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சமூகநல ஆணையாளர் திருமதி வி.அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் அண்ணாநகர் மண்டலம், ஷெனாய் நகரில் 27.02.2019 அன்று ‘‘பெண் குழந்தைகளை காப்போம், பெண்குழந்தைகளுக்கு கற்பிப்போம்’’ விழிப்புணர்வு பேரணி மற்றும் விழிப்புணர்வு முகாமினை துவக்கி வைத்தார்கள்.

இந்த விழிப்புணர்வு முகாமில் 320 தாய்மார்கள் தங்களுடைய பெண் குழந்தைகளுடன் கலந்து கொண்டனர். அனைத்து தாய்மார்களும் தங்களுடைய பெண் குழந்தைகளை பள்ளியில் சேர்ந்து கல்வி பயில வைப்பதுடன், 21 வயதிற்கு பிறகே அவர்களுக்கு திருமணம் செய்து வைப்போம் என்ற உறுதியுடன் செயல்பட வேண்டும் என்று முகாமில் அறிவுறுத்தப்பட்டது.

மேலும், இம்முகாமில் கலந்து கொண்ட அனைத்து தாய்மார்களுக்கும் பரிசுகளுடன் கூடிய பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. சமூகநலத்துறை சார்பில் தாய்மார்களுக்கு, பெண் குழந்தைகளின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் விழிப்புணர்வு நாடகங்கள், தப்பாட்டம்

போன்ற கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. ஊட்டச்சத்து உணவுகள் குறித்து கண்காட்சியும், மருத்துவ முகாமும் நடைபெற்றது.

தொடர்ந்து, "பெண்களை காப்போம், பெண்களுக்கு கற்பிப்போம்" என்ற விழிப்புணர்வு பதாகைகளுடன் சென்னைப் பள்ளியை சேர்ந்த 250 மாணவிகள் மற்றும் KRMMC கல்லூரியை சேர்ந்த 60 மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியும் நடைபெற்றது. பேரணியின் போது பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

இதேபோன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களில் உள்ள நகர சமுதாய நல மையங்களில் (UCHC), அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் கடந்த 6 மாதத்திற்குள், சென்னை மாநகரத்தில் பிறந்த 2,500 பெண்குழந்தைகளையும், தாய்மார்களையும் கௌரவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு தாய்மார்க்கும் பொம்மைகள், பாராட்டுச் சான்றிதழ்கள், துணிப்பைகள், மரக்கன்றுகள் முதலியன வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் நகர மருத்துவ அலுவலர் டாக்டர் சாந்தி, கூடுதல் நகர மருத்துவ அலுவலர் டாக்டர் செல்வி மார்டின், மண்டல அலுவலர் – 8 திரு. K.B விஜயகுமார் மற்றும் மாநகராட்சி பொது சுகாதாரத் துறை, மருத்துவ சேவைகள் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**